# செ
# கள்




அந்த விளம்பர தட்டி

'கள் இறக்க அனுமதி தராவிட்டால் அரசு நடத்தும் தமிழ் செம்மொழி மாநாட்டில் கள் விற்போம்' -என முழங்கிக் கொண்டிருக்கும் கள் இயக்கம் அடுத்தகட்ட நடவடிக்கையாக 'ஏழைகளின் சோர்வை நீக்கும் டானிக் கள் என பெரியார் கூறியுள்ளார்' என கோவை நீதிமன்ற வாயிலின் முன்பு மன்னர் அதியமான் அவ்வைக்கு நெல்லிக் கனியோடு கள்ளும் கொடுப்பதைப் போன்று விளம்பரத் தட்டி வைத்திருப்பது கோவையை பரபரப்பாக்கியிருக்கிறது.

பரபரப்பை கிளப்பியிருக்கும் அந்த விளம்பரத் தட்டியில் அதியமான் அவ்வைக்கு கள் கொடுத்ததற்கான ஆதாரமாய்

'சிறிய கள் பெறினே எமக்கீயு மன்னே,
பெரிய கள் பெறினே யாம் பாடத்தான்
மகிழ்ந்து உண்ணு மன்னே...'

என புறநானூற்றுப் பாடலை காட்டி யிருக்கிறார்கள்.

ஆனால் அந்த விளம்பரத் தட்டி கள் குடிப்பது உடலுக்கு மிகச் சிறந்தது என்பதை மக்களிடையே பொய்ப் பிரச்சாரம் செய் வதற்கென்றே வேண்டுமென்றே வைக்கப் பட்டிருப்பதோடு காவல்துறையின் அனுமதி யின்றி வைக்கப்பட்டி ருக்கும் அவ்விளம்பரத் தட்டியை அகற்ற வேண்டும் என ஆதித் தமிழர் பேரவை பலத்த எதிர்ப்பு காட்டுவது குறித்து கள் இயக்கத் தலைவரும், வழக் கறிஞருமான நல்லசாமியிடம் கேட்டோம்.

''தமிழ் செம்மொழி மாநாட்டிற்காக தமிழரின் பாரம்பரியத்தையும், வரலாறுகளையும், பண்பாடுகளையும், வீரத்தையும் விளக்கும் சிற்பங்களும், ஓவியங்களும் மாநாட்டில் பங்கேற்கும் உலகத் தமிழர்களின் பார்வைக்கு வைக்கப் படுவதற்காக கோடிக்கணக்கான ரூபாயில் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

அந்த ஓவியங்களோடு அவ்வைப் பாட்டிக்கு அதியமான் நெல்லிக்கனியோடு கள்ளும் கொடுக்கும் இந்த அற்புதக் காட்சி ஓவியத்தையும் மாநாட்டில் வைக்க வேண்டும் என்பதைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம். ஒழுக்க நெறிகளை மனிதர்க்கு ஆத்திசூடியாய் தந்த அவ்வைப் பாட்டியே கள் குடித்திருக்கிறார் என்பதையும், இதன்மூலம் கள் உடலுக்குச் சிறந்த பானம் என்பதையும் எல்லோர்க்கும் உணர்த்த வேண்டியேதான் இந்த ஓவியத்தை மாநாட்டில் வைக்க வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். வருடக் கணக்காய் நாங்கள் கள் இறக்க அனுமதி கோரிக்கொண்டி ருப்பதை திட்டமிட்டே மறுக்கும் அரசுதான் மாநாட்டில் மட்டுமல்ல கோவை வீதிகளில் கூட இந்த ஓவியத்தை வைப்பதற்கு காவல்துறையின் அனுமதி கிடைக்காமல் செய்திருக்கிறது. அதனால்தான் நீதிமன்ற வாயிலின் முன்பு இந்த அற்புத ஓவியத்தை வைத்திருக்கிறோம்.

தந்தை பெரியாரே ஏழைகளின் சோர்வை நீக்கும் கள் என்று சொல்லியிருப்பதை பெரியாரை முன்னிறுத்தி அரசியல் செய்பவர்களும், இயக்கம் நடத்துபவர்களும் கவனத்தில் கொள்ளாதது ஏன்? பெரியார் சொன்னது பொய்யா? இப்போதுகூட காவல்துறை தரப்பிலிருந்து கமிஷனர், ஐ.ஜி. ஆகியோர் எங்களிடம் மாநாட்டுக்கு இடைஞ்சல் செய்யக் கூடாது என்று பேசுகிறார்கள். அவர்களிடமும் யாரிடமும் நாங்கள் சொல்லியதும், சொல்லிக்கொள்வதும் ஒன்றே ஒன்றுதான் அது நிச்சயம் கள் இறக்க அரசு அனுமதிக்க வேண்டும்,



நல்லசாமி



அதியமான்

# மொழி மாநாட்டில் சப்ளை! –கோவை கலாட்டா!

இல்லையென்றால் நிச்சயம் செம்மொழி மாநாட்டில் நாங்கள் கள் விற்பனை செய்வோம் என்பதுதான் அது. வழக்கு, கைது, சிறை என்பதற்கெல்லாம் நாங்கள் அஞ்சப்போவதில்லை'' என்கிறார் தீர்க்கமாய்.

ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமானோ, ''கள் இறக்குவதற்கு அனுமதி தராவிட்டால் செம்மொழி மாநாட்டுக்கு இடையூறு செய்வோம் என்றும் கள் இறக்கியே தீருவோம் என்றும் சிறை நிரப்பும் போராட்டம் செய்தவர்களை மண்டபத்தில் அடைத்தபோது குய்யோ முறையோ எனக் கதறி மாநாட்டுக்கு இடையூறு செய்யமாட்டோம் என எழுதிக் கொடுத்துவிட்டு... விட்டால் போதும் என மண்டபத்தை விட்டு ஓடி வந்த கொ.மு. கழகத்தினர் உலகக் காமெடிக்கு நிகரானதுதான் கள் இயக்கத்தினரின் மாநாட்டில் கள் விற்போம் என்கிற கூற்றும்.

கடந்த இரண்டு மாதத்திற்கு முன்னால் ஒருநாள் என் அலைபேசித் தொடர்பில் வந்த நல்லசாமி கள் இயக்கத்துல இருந்து பேசறேன். கள் இயக்கங்கிறதுனால உடனே நாங்க குடிக்கிற ஆளுகன்னு நீங்க நெனைச்சுக்காதீங்கன்னுதான் பேச ஆரம்பிச்சாரு, அப்ப நான் கேட்டது என்னன்னா... நீங்க குடிக்கமாட்டீங்கன்னா... யாரு குடிக்கிறதுக்காக நீங்க கள் இறக்கறீங்கன்னு கேட்டேன். அதுக்கு அவரால பதில் சொல்ல முடியலை.

'துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்'னு உலகத்தின் ஒப்பற்ற நூலான திருக்குறளில் கள்ளுண்ணாமைங்கிற அதிகாரத்துல அய்யன் திருவள்ளுவர் கள்ளு ஒரு நஞ்சுன்னு சொல்லலையா?

ஏழைகளின் டானிக் அல்ல கள். முன்னைப் போலவே ஏழைகளை அடிமையாக்க, பணம் கொழுக்க தோட்டத்து முதலாளிகள் செய்கிற மேஜிக்தான் கள்.

அவ்வைப் பாட்டிக்கு அதியமான் நெல்லிக் கனியோடு கள்ளும் கொடுக்கும் காட்சியை எதற்காக பதிவு செய்ய வேண்டும். நல்ல விடயங்களைப் பதிவு செய்து உலகத் தமிழர்களுக்கு காட்டப்படவேண்டும் என்ற நல் நோக்கில்தான் செம்மொழி மாநாட்டுக்காக ஓவியங்களும் சிற்பங்களும் தயாராகிக்கொண்டிருக்கின்றன, அந்த நல் நோக்கை சிதைப்பதற்காக தீட்டப்பட்டிருக்கும் இந்த விளம்பரத் தட்டியை எங்குமே வைக்கக்கூடாது.

தமிழர்கள் கூடும் இந்த அற்புத மாநாட்டில் கள் விற்பனை செய்ய முடியாது. மீறி இவர்கள் கள் விற்றால் ஆதித் தமிழர் பேரவை மட்டுமல்ல, மாநாட்டில் கூடும் தமிழர்களே எதிர்ப்பார்கள்'' என்கிறார் கோபமாய்.

தமிழ் செம்மொழி மாநாட்டுக்கான பந்தல் அமைக்கும் பணி, நடமாடும் கழிப்பிட வண்டிகள், உலகெங்கிலுமிருந்தும் கலந்துகொள்ளும் தமிழர்களின் வசதிக்காக வாகன ஏற்பாடுகள் என அரசு தீவிரங்காட்டிக் கொண்டிருக்கும் நிலையில் மாநாட்டில் கள் விற்போம் என ஒலிக்கத் தொடங்கியிருக்கும் குரல் நீர்த்துப்போகுமா? இல்லையா என்பது இன்னும் சில நாட்களில் தெரிந்துவிடும்.

–அருள்குமார்

## அப்படியா?

அறுபடைவீடுகளில் ஒன்றின் எம்.எல்.ஏவான அந்த எதிர்க்கட்சிப் புள்ளி கட்சிப் பதவியிலிருந்து கட்டம் கட்டப்பட்டார். தன் மீது சுமத்தப்பட்ட பணக்குற்றச்சாட்டு மற்றும் கட்சித்தாவல் புகாரால் கோபமாகியிருக்கும் அவர், சும்மாவா எனக்குப் பதவி கொடுத்தாங்க? அந்த டாக்டருக்கு 1சி கொடுத்ததாலதான் தோட்டம் எனக்குப் பதவி தந்தது. நான் சட்டமன்றத்தில் ஆளுந்தலைமையை எதிர்த்துப் பேசியபோது, உங்க கட்சியில் உங்களை என்ன நிலையில் வச்சிருக்காங்கன்னு தெரியும்னு ஆளுந்தலைமையிடமிருந்து நக்கலாக பதில் வந்தது. நான் அந்தப் பக்கம் எப்படி போவேன் எனப் புலம்புகிறாராம்.

